Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Cultural Events in *Nattrinai*

**Dr.D.Danalakshmi,** Associate Professor, Tamil Research Center,
Sri Saratha College for Women, Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-3050-8097
**DOI: 10.5281/zenodo.6621151**

## Abstract

*One of the famous internal texts in Tamil is 'Nattrinai'. The ancient Tamils, who lived in the five temples, were immersed in the various events in which they lived. The poets have recorded how the Tamils had life harmonious with nature, have come together and lived according to the time and environment. The ancient people enjoyed holding festivals with the people of their hometown. Maritime Tamil people are engaged in the fishing industry and live a practical life in harmony with the industrial environment. The article describes a collection of hymns, subtle sentiments and methods of realization that reflect the sacrifices made to the gods and the self-defense and social structure they enjoyed without suffering from the Gods.*

**Keywords:** Nature, Ecological, Life Style.

## References

[1] K.V.Balasubiramanian**.** *Natrinai Mulamum Vuraiyum*, New Century Book House Pvt.Ltd. Chennai - 600 098.
[2] K.K.Pillai, *Tamilnadu History People Culture*, World Tamil Research Centre, Chennai - 600 113, 2018.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்*



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# நற்றிணையில் பண்பாட்டு நிகழ்வுகள்

**முனைவர் த. தனலெட்சுமி,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறைத்தலைவர், ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0003-3050-8097

DOI: 10.5281/zenodo.6621151

**ஆய்வுச்சுருக்கம்**

*நல் + திணை என்னும் பெருமைக்குரிய அக நூல்களில் ஒன்று நற்றிணை. ஐந்திணைகளிலும் வாழ்ந்த பண்டைய கால தமிழர்கள், தாங்கள் வாழ்ந்த பல்வேறு நிகழ்வுகளில் செம்மாந்துள்ளனர். இயற்கையோடு இயைந்த வாழ்க்கைமுறையினைக் கொண்ட தமிழர்கள் கால சூழலுக்கு ஏற்ப எங்ஙனம் கூடி வாழ்ந்து இன்புற்றுள்ளனர் என்பதை நற்றிணையில் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். பண்டைய மக்கள் தங்களுடைய ஊர் மக்களோடு இணைந்து விழாக்கள் நடத்தி மகிழ்ந்தனர். கடற்துறை சார்ந்த மக்கள் மீன்பிடி தொழில் ஈடுபட்டு அத்தொழில் சூழலுக்கு ஏற்றாற்போல நடைமுறை வாழ்க்கையினை நடத்தியுள்ளனர். தெய்வங்களுக்கு பலியுணவு கொடுத்து, அத்தெய்வங்களிடமிருந்து தங்களுக்கு துன்பம் நேரிடாமல் தற்காப்பு மற்றும் சமூக கட்டமைப்பைப் போற்றினார்கள் என்பவற்றை செம்மையுற எடுத்துரைக்கின்ற நற்றிணைப்பாடல்களின் தொகுப்பினையும் நுட்பமான உணர்வுகளையும் உணர்த்தல் முறைகளையும் கட்டுரை விளக்குகிறது.*

**திறவுச்சொற்கள்:** இயற்கை, நிலச்சூழல், வாழ்க்கை முறைகள்.

## முன்னுரை

*நற்றிணை* என்பதில் நிலம் சார்ந்த ஒழுக்கங்கள் கூறப்படுகின்றது. ஊர்வாழ் மக்களின் தொழில்கள், கூடி வாழ்கின்ற மக்களின் பண்பாடு சார்ந்த விழாக்கள், கூடி ஆரவாரிக்கும் போர் நிகழ்வுகள் அகமாந்தர்களின் அகவுணர்வு புலப்பாட்டுக்கு கூறப்படுகிறது. இவ்வுணர்வுகள் பழங்கால மக்களின் பண்பாட்டு விழுமியங்களைாகத் திகழ்கின்றன. கடல்துறையில் பறவைகளும் மீனினங்களும் இவற்றை எடுத்துக்காட்டி விளக்கும் சங்கப்பாடல்கள் பண்பாட்டு நிகழ்வைத் தாங்கி நிற்கின்றன.

## ஈர்மண் செய்கை

நெஞ்சினால் பொருள்வலிக்கப்பட்ட தலைமகன் தலைமகளை எய்தி ஆற்றானாய் நெஞ்சினைச் சொல்லிச் செலவு அழுங்கியதாகின்ற,

**“செலவிரை வுற்ற அரவம் போற்றி.**
**… ஈர்மண் செய்கை நீர்படு பசுங்கலம்**
**பெருமழைப் பெயற்கு ஏற்றாங்கு, எம்**
**பொருள்மலி நெஞ்சம் புணர்ந்து உவந்தன்றே” (நற், பா. 308)**

என்னும் பாடலில், ஆராய்ந்து தேர்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்த என் காதலி, நான் பொருள் காரணமாகப் பிரிந்து செல்லுதலின், விரைவினால் உண்டாகிய சொல்லை விரும்பிக் கேட்பாள். பின்பு தன்னுடைய குவளைமலர் போன்ற மை தீட்டப்பெற்ற கண்களில் கண்ணீரை வடிப்பாள். அதனைக்கண்ட நான் இஃது என்ன தேற்றி அவளைப் பலவாறாகப் பாராட்டிவினாவ, அதற்கு

விடைகூற முடியாதவளாய் நாணமடைந்தவளாய் வருவாள். நான் பிரிவதில் விருப்பம் இல்லாதவளாய் மெல்லமெல்ல என்னருகில் வந்து நீஎங்கே பொகின்றாய் என்று கேட்க முடியாமலும், போகவேண்டாம் என்று தடுக்க முடியாமலும் இருப்பாள். அத்தகைய அவள் நறுமணம் வீசுகின்ற நெருங்கிய சூழல் முடித்த கொண்டையுடன் விளங்குபவள். அவள், சிறந்த சித்திரத்தொழில் அமைந்த பாவையொன்று இயந்திரம் அற்று விழுந்தாற் போலக் கலங்கி, நெடும்பொழுது நினைந்து நின்று என்மார்பின் மீது சாய்ந்து விழுவாள். அவ்வாறு விழுந்தவளைக் கண்டு பொருள்வயிற் பிரியக் கருதிய என் நெஞ்சம், ஈரமான மண்ணால் செய்யப்பட்டு ஈரம் காயாத மட்பாண்டம் ஒன்று, இடைவிடாமல் பெய்யும் பெரியமழைக்கு நீர் ஏந்த வைத்தபொழுது அப்பாண்டம் அந்நீரோடு கலந்து கரைந்து அழிவதைப்போல, அவளுடன் ஒன்றுபட்டுக் கலந்து கரைந்து வேறுபாடு இல்லாமல் அடங்கிப்போனது. இனிமேல் பிரிவதால்என்னவாகும்? என்பதில் மட்பாண்டம் செய்தல் நிகழ்வு கூறப்படுகிறது.

**ஊர் விட்டு அகழ்தல்**

தலைவன் பிரிதலால் தலைவி வருந்தினள். உயிரற்றது போல் தன் உடம்பு தனிப்பட்டதை அவள் நினைந்து மேகம்தெற்கே சென்றாற் போல என் நெஞ்சம் அவர்பாற் சென்றதாகவே தனிமகன் போன்று என் உடம்பு இருக்கின்றது என்பதை,

**“குணகடல் முகந்து. குடக்கு ஏர்புஇருளி**
**மண்திணி ஞாலம் விளங்க, கம்மியர்**
**செம்புசொரி பானையின் மின்னி, எவ்வாயும்**
**தன்தொழில் வாய்த்த இன்குரல்எழிலி**
**தென்புல மருங்கில் சென்றுஅற்றாங்கு.**
**நெஞ்சம் அவர்வயின் சென்றென, இண்டுஒழிந்து,**
**உண்டல் அளித்து என்உடம்பே – விறல்போர்**
**வெஞ்சின வேந்தன் பகைஅலைக்கலங்கி,**
**வாழ்வோர் போகிய பேர் ஊர்ப்**
**பாழ்காத் திருந்தத னிமகன் பொன்றே” (நற், பா. 153)**

என்னும் பாடலில், கீழைக்கடலில் நீரை முகந்து கொண்டு மேலே சென்று இயங்கும் மேகம், எங்கும் இருளடையுமாறு இரண்டு, மண்செறிந்த உலகம் விளங்குமாறு, கம்மியர் செம்பினாலே செய்த பானையைக் கடைந்தார் போன்று மின்னி எங்கும் பெய்யும் தன்தொழிலைச் செய்து இனிய இடி முழங்குதலாகிய குரலோடு மழைபெய்து முடித்தவுடன் தெற்குத் திசை நோக்கி ஒழிந்தது. அதுபோல என் நெஞ்சம் இவ்விடத்தத் தங்காமல் அவரிடம் சென்று தங்கிவிட்டது. அதனால் வலிமைமிக்க போரைச் செய்யவல்ல வெய்ய சினம் கொண்ட பகைவேந்தனின் படை அலைத்தலால் அதற்குக் கலங்கி அவ்வூர்க் கண் வாழும் மக்களெல்லாம் பெரிய ஊரைவிட்டு அகன்று விட அப்பேரூரைக் காவல் செய்திருந்த ஒற்றை மனிதனைப்போல உண்ணுவதால் காக்கப்படும் இவ்வுடம்பு இங்குத் தனியாய் நின்றது என்பதில் ஊர் நிகழ்வு கூறப்படுகிறது.

**பலி உணவு கொடுத்தல்**

களவில் ஒழுகும் தலைவன் தலைவியை உடன்போக்கிற் கொண்டு சென்றமை அறிந்ததாய் தலைவியின் தோழியரையான் காணுந்தோறும் நடுங்கி நொந்து நிற்றல்போல எம் மகளைக் கொண்டு சென்ற தலைவனை ஈன்ற தாயும் நடுங்கி நோவாளாக என உரைக்கின்ற,

**“மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடி,**
**பலிக்கள் ஆர் கைப்பார் முதுகுயவன்**
**இடுபலி நுவலும் அகன்தலை மன்றத்து**
**விழவுத்தலைக் கொண்ட பழவிறல் மூதூர்ப்**
**பூங்கண் ஆயம்காண் தொறும், எம்போல்,**
**பெருவிதுப் புறுக மாதோ – எம்இற்**
**பொம்மல் ஓதியைத் தன்மொழிக் கொளீஇ,**
**கொண்டு உடன் போக வலித்த**
**வன்கண் காளையை ஈன்ற தாயே” (நற், பா. 293)**

என்னும் பாடலில் நீலமணி போலும் பூங்கொத்துக்களைக் கொண்ட நொச்சிமாலையைச் சூடிப்பலிகளை இடுகின்ற செயல்புரியும் கையினை உடைய மிக முதியகுயவன் தான் இடுகின்ற பலியை உண்ணுதற்காகத் தெய்வங்களையும் காக்கைகளையும் அழைப்பான். அத்தகைய அகன்ற இடத்தையுடைய மன்றத்தின் கண்ணே திருவிழாக் கொண்டாடத் தொடங்கியுள்ள இந்தப் பழைமையான வெற்றி மிகக் ஊரிடத்தே என் மகளோடு விளையாடும் பூப்போலும் கண்ணை உடைய தோழியான நான் காண்பேன். அவ்வாறு காணுந்தோறும், யான் நெஞ்சு நடுங்கி மிகவும் துன்புறுவேன். நான் துன்புறுவது போலவே, எனது இல்லத்தில் இருந்த பொலிவு பெற்ற கூந்தலைக் கொண்ட என் மகளைத் தன் சொற்களால் மயக்கித்தன் வயப்படுத்திக் கொண்டு தன் உடன் அழைத்துச் சென்றாள் என்பதைப் பலி உணவு கொடுக்கும் குயவன் நிகழ்வு கூறப்படுகிறது.

**ஆரவார மிக்க விழா**

தலைவிக்குத் தலைவன் பால் வேட்கை பெருகிற்று. அது தாங்க வியலாது “நிலவு பரந்தது, ஊர்விழாக் கொண்டாடும். கானம் வண்டிசைக்குமாறு விளங்கும். இத்தகைய இரவிலே யான் உறங்கவில்லை. அதனால் என்னொடு இந்த உலகம் போர் செய்யுமோ? அன்றி இவ்வுலகத்துடன் அவலமுற்ற என் நெஞ்சுதான் போர் செய்யுமோ?” என ஆற்றாமை மீதூரச் சொல்லுகின்ற,

**“நிலவே நீலுநிற விசும்பில் பல்கதிர் பரப்பி**
**பால்மலி கடலின், பரந்து பட்டன்றே**
**ஊரே, ஒலிவரும் சும்மையொடு மலிபுதொகுபு ஈண்டி**
**கலிகெழு மறுகின், விழவுஅ யரும்மே**
**கானே, பூமலர் கஞலிய பொழில் அகம்தோறும்**
**தாம்அமர் துணையொடு வண்டு இமிரும்மே**
**யானே, புனைஇழை ஞெகிழ்த்த புலம்புகொள் அவலமொடு**
**கனைஇருங் கங்குலும் கண்படை இலெனே**
**அதனால், என்னொடு பொரும்கொல், இவ்உலகம்?**
**உலகமொடுபொரும்கொல், என்அவலம் உறுநெஞ்சே?” (நற், பா.348)**

என்ற இப்பாடலில், நீலநிறம் பொருந்திய ஆகாயத்தில் பலகதிர்களைப் பரப்பிய, பால்நிரம்பிய கடல் போல ஒளிபரவியதாய்ச் செய்து நிலவு விளக்கும். இந்நிலவொளியில் ஊரினர் பெருகும் ஆரவாரத்துடன் மிகுதியாய்க் கூடி ஓசையுடைய தெருவினிடத்தில் விழாக் கொண்டாடுகின்றனர். காட்டிலே, பூக்கள் மலர்ந்து செறிந்த சோலைகளின் இடந்தோறும் தாம் விரும்பும் துணையும் வண்டுகள் ஒலித்து விளங்கும்.

இத்தகைய தானபொழுதில் யானோ, அணிந்த இழைகளை நெகிழச்செய்த தனிமையால் விளைந்த வருத்தத்துடன், செறிந்த இருளுடைய இரவிலும் உறங்காது இருக்கின்றேன். இவ்வாறு உலகத்தார் இயல்புக்குப் பொருந்தாது மாறுபடுவதால் இவ்வுலகம் என்னொடு போர்புரியுமோ? இவ்வுலகத்துடன் அவலமுற்ற நெஞ்சுதான் போர் செய்யுமொ? என்பதாகும். இவற்றில் ஒருவனிடத்தில் விழாக் கொண்டாடும் நிகழ்வு கூறப்படுகிறது.

**உழவர்கள் முழக்கம்**

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனைத் தலைமகள் ஊடல் தீர்க்கின்றாள். தலைவ? என் அழகெலாம் தொலைந்தாலும் உன்னை நான் நெருங்கவிடேன். விடின் என்கைகள் என்அளவில் இல்லாமல் உன்னைத் தழுவும். சந்தனமும் மாலையையும் உடையை ஆதலின் உன்னை நீப் பதுகலம் கழிப்பது போலாகும். எனவே இங்கு வாராதே, உன்னோடு அப்பரத்தை நீடுவாழ்க எனக் கூறியதாகின்ற,

**"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ**
**பழனப் பல்புள் இரிய, கழனி**
**வாங்கு சினை மருதத்தூங்கு துணர்உதிரும்**
**தேர்வண் விரர்அன் இருப்பை அன்ன, என்**
**தொல்கவினத் தொலையினும் தொலைக! சார**
**விடேஎன் விடுக்குவென் ஆயின், கடைஇக்**
**கவவுக்கை தாங்கும் மதுகையகு வவுமுலை**
**சாடிய சாந்தினை வாடிய கோதையை**
**ஆசுஇல் கலம்தழீ இயற்று**
**வாரல் வாழிய கவைஇ நின்றாளே!" (நற், பா. 350)**

என்னும் இப்பாடலில், "வெண்ணெல்லை அரிகின்ற உழவர்கள் முழக்கம் தண்ணுமைக்குஅஞ்சி வயலில் உள்ள பலவாகிய பறவை இனங்கள் வயற்பரப்பை விட்டு அகன்று ஓடி வயலின் மீது தாழ்ந்து வளைந்த கிளையையுடைய மருத மரத்தில் சென்று தங்கும். அதனால் அம்மரத்துப் பூக்கள் உதிரும். தம்மை நாடிவரும் இரவலர்களுக்குத் தேரைக் கொடுக்கும் வள்ளன்மைமிக்க விரான் என்பவனுடைய இருப்பையூர் போன்ற எனது பழைய அழகெல்லாம் நீங்குவதாயினும் நீங்கட்டும். நீஎன்னருகில் நெருங்க அனுமதியேன். விடுவேன் ஆயின் என் சொற்கள் உன்னை விலக்கினாலும், என்னோடு பொருந்திய கைகள் தாமே வந்து உன்னைத் தழுவும். நீயும் வலிமைமிக்க பரத்தையின் குவிந்த மார்பகத்தால் மோதப்பட்ட சந்தனத்தைக் கொண்டுள்ளாய். அவளாலே தழுவப்பட்டமையால் துவண்ட மாலையையும் கொண்டுள்ளாய். ஆகவே உன்னைத் தொடுதல், கலம்கழிந் தெறிந்த தாழி முதலியவற்றைத் தீண்டுதல் போல ஆகும். ஆகவே நீ இங்கு வரவேண்டா. உன்னைத் தழுவிநின்ற அப்பரத்தை வாழ்வாளாக" என்பதில் உழவர் நிகழ்வு கூறப்படுகிறது.

**கடல் துறை விளங்கு நகர்**

மணமனைப் பிற்றை ஞாயிறு புக்கதோழி நன்கு ஆற்றுவித்தாய் என்ற தலைமகற்குச் சொல்லியதாகின்ற,

**"கிளைசெத்து மொய்த் ததும்பி, பழம் செத்துப்**
**பல்கால் அலவன் கொண்ட கோட்கு அசாந்து**

**கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்**
**இரைதேர் நாரை எய்தி விடுக்கும்**
**துறைகெழு மரந்தை அன்ன இவள்நலம்**
**பண்டும் இற்றே கண்டிசின் தெய்ய**
**உழையின் போகாது அளிப்பினும், சிறிய**
**ஞெகிழ்ந்த கவின் நலம் கொல்லோ? – மகிழ்ந்தோர்**
**கட்களி செருக்கத்து அன்ன**
**காமம் கொல்? - இவள் கண்ப சந்ததுவே!" (நற், பா. 35)**

என்னும் இப்பாடலில், பொங்கி எழுகின்ற அலைமோதிய நேரிதாகியமணல் அடுத்த கடற்கரை, அங்கு உதிர்ந்து புல்லிய காம்பையுடைய நாவற்கனியின் புறத்தினைப் பற்றி மொய்த்த வண்டுகள் அப்பழத்தைத் தம்மையொத்த வண்டென்று கருதின. பலகால்களையுடைய நண்டு அதனைப் பழமென்றே கருதிக்கைக் கொண்டது. வண்டுகள் நண்டை விலக்கிக் கனியைக் கொள்ளும் முயற்சியில் யாழோசை போல் பேரொலி பரந்தது. அப்போது இரைதேடி அங்கு வந்து நாரையைக் கண்டு நண்டு கனியைவிட்டு அகன்றது. இத்தகு கடல்துறை விளங்கும் மாந்தைநகர் போன்ற இவளது நலம் முன்பும் இத்தன்மை உடையதே. நீ காண்பாயாக. இவளிடத்துக் களவுக்காலத்தில் நீவிலகாமல் இருந்து அன்பு செய்தாலும், இவள் கண்பசப் புற்றது. அது என்பதில் கடல்துறை நிகழ்வு உணர்த்தப்படுகிறது.

**குன்று சூழ் ஊர்**

பரத்தை தலைவியின் பாங்கிக்குப் பாங்காயினார் கேட்ப, விறலிக்குச் சொல்லியதாகின்ற,

**"எம்நயந்து உறைவி ஆயின், யாம்நயந்து**
**நல்கினம் விட்டதுஎன்? நலத்தோன்அவ்வயின்**
**சால்பின் அளித்தல் அறியாது, "அவட்குஅவள்**
**காதலள் என்னுமோ?" உரைத்திசின் – தோழி!**
**நிரைத்த யானைமுகத் துவரி கடுப்பப்**
**போதுபொதி உடைந்த ஒண் செங்காந்தள்**
**வாழைஅம் சிலம்பின் வம்புபடக் குவைஇ**
**யாழ்ஓர்த் தன்ன இன்குரல் இனவண்டு**
**அருவிமுழவின் பாடொடு ஒராங்கு,**
**மென்மெல இசைக்கும் சாரல்,**
**குன்ற வேலித்தம் உறைவின் ஊரே!" (நற், பா. 76)**

என்ற இப்பாடலில், "விறலியே! தலைமகள் எம்மை விரும்பி உறைபவளாய் இருக்கையில் அவளை விரும்பி, அவள் விரும்பிய வண்ணம், அளித்து விடுதற்கு என்ன உள்ளது? நம்நலத்திற்குக் காரணமாயிருக்கும் தலைவனை நாம் கொண்ட பெருந்தன்மையால் அதர்தலைவியிடத்து அனுப்பினேன். நான் அவ்வாறு அனுப்பியது அறியாமல், நிரைத்திருக்கும் யானையின் முகத்தில், உள்ள கோடுகளைப்போல் பொதிந்த எல்லா அரும்புகளும் மலர்ந்த செங்காந்தளும் வாழையமுடைய மலையின்கண் மணம் கமழயாழோசையைக் கேட்டது போன்ற இனியகுரலையுடைய கூட்டமாகிய வண்டுகள் திரண்டு புகுந்து அருவியாகிய முழவின் ஒலியோடு ஒத்துமெல்ல ஒலிக்கின்ற சாரலில் குன்று சூழ்ந்துவேலியாக உடைய ஊரில் உள்ளவர்கள் "தலைவியிடம் அப்பரத்தைமிக்க அன்புடையவள்.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

அதனால்அத்தலைவிவிரும்பியவண்ணம்தலைவனைஅனுப்பினள்" என்று கூறுவாரோ? தோழியே இஃது எவ்வாறு என உரைப்பாயாக. அங்ஙனமாயின் மீட்டும் நமது ஆற்றலால் அவனை இங்கேகைக் கொண்டு சேர்ப்போம்" என்பதில் குன்று சூழ்ந்த ஊர் கூறப்படுகிறது.

**முடிவுரை**

மண்ணால் செய்கின்ற பானைத்தொழில் நிகழ்வுகள் செழுமையுற்றுத் திகழ்ந்திருந்ததை உணரமுடிகிறது. போரில் வெற்றி கொண்ட மன்னன் ஆணைக்கிணங்க மக்கள் ஓர் ஊர்விட்டு கூட்டமாக மற்றோர் இடம் சென்றுள்ளனர். பலி உணவுகளைக் கொடுக்கின்ற முதியகுயவன் பண்பாட்டில் சிறந்து வாழ்ந்திருந்ததை உணரமுடிகிறது. மருதநில மக்கள் கூடி நின்று விழா எடுத்ததும் வயல்களில் அறுவடை செய்ததும் பண்பாட்டு நிகழ்வுக்காட்சிகளாக மாண்புறுகிறது. ஊர் அமைப்பானது வளமிகு குன்றுகள் சூழ்ந்து இருந்ததைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. பண்புமிகு செயல்களைக் கொண்ட மரபுகள் பழங்காலத்தில் சிறந்தவை பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

**நூற்பட்டியல்**

[1] பாலசுப்பிரமணியன், கு.வெ. *நற்றிணை மூலமும் உரையும்*, (உ.ஆ.), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்பி. லிட்., சென்னை – 2014.

[2] பிள்ளை, கே.கே., *தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்*, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113, 2018.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.